26—

ஆரம்ப சுகாதார நிலையம்

***42743—திரு. சு. ராஜேந்திரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, விளாங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 24 மணி நேரமும் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே கடுக்கூர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகச் செயல்பட்டு வருகிறது. அதே ஒன்றியத்திலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கக்கூடிய விளாங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் நலன் காத்திட, ஓய்வில்லாமல் உழைத்து, மறைந்தும் மக்கள் மனதில் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆன்மாவை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2019 ஜனவரி 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் கோரத் தாண்டவம் ஆடிய 'கஜா' புயலால் பாதிப்பு ஏற்பட்ட காலத்தில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கையில் ஈடுபட்டு மக்களின் விலை மதிப்பில்லா உயிர்களைக் காத்து, மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, பேரிடர் நிவாரணப் பணிகளையும் விரைந்து மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுகட்டமைப்புப் பணிகளைச் செய்து கொடுத்த அரசு, அம்மா அவர்களின் அரசு என்பதைப் பெருமையுடன் இந்த அவையில் பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் வேத வாக்கான, 'இன்னும் 100 ஆண்டுகளானாலும், கழக ஆட்சி மக்கள் பணியில் தொடர்ந்து செயலாற்றும்' என்பதை உறுதி செய்யும் வகையில், தமிழக மக்களின் உள்ளங்களில் நன்மதிப்பையும், மத்திய அரசிடமும், மாற்றுக் கருத்துள்ள பல்வேறு தரப்பினரிடமும் பாராட்டினைப் பெற்ற அரசு, இந்த நல்லரசு என்பதை இந்த அவையில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் நலன் கருதி அல்லும் பகலும் உறங்காமல், அயராது பாடுபட்டு, 'கஜா' புயல் மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள உரிய ஆணைகளிட்டு, பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து, ஆறுதல் வழங்கிய மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நடக்கும் விவசாயிகளின் பாதுகாவலர், நல்லாட்சியின் நாயகர், நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுக்கும், தென்பாண்டி சிங்கம் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்கள் மகிழ்ந்திடும் வகையில், மக்களின் பாராட்டினைப் பெறும்வகையில் வழக்கமான பொங்கல் பரிசுடன், இந்த ஆண்டு ரூ.1,000/– சேர்த்து வழங்கியமைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், இந்த நல்லரசிற்கும் மக்களின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2019 ஜனவரி 7

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்கு மிகுந்த பயனுள்ள வகையிலும், வரவேற்பினைப் பெறுகின்ற வகையிலும், அரியலூர் மாவட்டம், விளாங்குடி சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்களைப் பணியமர்த்தி, அனைத்து நாட்களிலும் 24 மணி நேரமும் பிரசவ கவனிப்புச் சேவை கிடைக்கின்ற வகையில் விரிவுபடுத்திக் கொடுத்துள்ள இந்த நல்லாட்சிக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் அரியலூர் தொகுதி மக்களின் சார்பாக மீண்டும் எனது நன்றியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், விளாங்குடி ஊராட்சியில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சிதம்பரம்–மானாமதுரை தேசிய நெடுஞ் சாலையில் அமைந்துள்ளது. சாலை விபத்துகள் நடைபெறும் காலங்களில் மக்களின் உயிரைக் காத்திடும் வகையில் இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேரமும் செயல்படும் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டியது மிகவும் அவசியமானதாகும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்று மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று அரியலூர் மாவட்ட மக்களின் சார்பாக வலியுறுத்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக, 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மருத்துவமனையாகத் தரம் உயர்த்தக்கூடிய திட்டத்தை 2001–ல் இந்திய அளவில் முதன்முதலாக தமிழ்நாட்டில் தொடங்கி வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அதன் தொடர்ச்சியாக, 385 ஒன்றியங்களிலும்

2019 ஜனவரி 7]

இப்போது ஒரு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மிகச் சிறப்பாகச் செயல்படுகிறது. தாங்கள் குறிப்பிடக்கூடிய அந்த விளாங்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒரு மாதத்திற்கு 4 பிரசவங்களும், ஒரு நாளைக்கு 130–லிருந்து 140 நோயாளிகளும் வந்து செல்லக்கூடிய நிலை இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப அது கருத்தில் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். விளாங்குடி ஆரம்ப சுகாதார நிலையம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்திருக்கின்றது, அந்தப் பகுதியில் விபத்துகள் அடிக்கடி நடக்கின்றன என்று சொன்னாலும், பொது சுகாதாரத் துறை என்பது வேறு. விபத்துகள் அதிகமாக நடக்கக்கூடிய மாநில நெடுஞ்சாலை, தேசிய நெடுஞ்சாலைகளிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் கண்டறியப்பட்டு "தாய்" திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டு விபத்துகாய சிகிச்சை மையங்களாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இதுவரை, 75 இடங்கள் கண்டறியப்பட்டு, அவை Accident Trauma Care Centres*–ஆக, விபத்துகாய சிகிச்சை மையங்களாக கடந்த இரண்டு ஆண்டுகளாக உருவாக்கப்பட்டு வருகின்றன. எதிர்காலத்தில், இதுபோன்று மாநில நெடுஞ்சாலையில் இருக்கக்கூடிய ஆரம்ப சுகாதார நிலையங்களும் கருத்தில்கொள்ளப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், திருமழபாடி ஊராட்சியில் புதியதாக ஓர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தர வேண்டுமென்று அரியலூர் தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்மூலம் இந்த நல்லரசிடம் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கொறடா அவர்களுடைய*

சட்டமன்றத் தொகுதியில் அவர் குறிப்பிடுகின்ற அந்த ஒன்றியத்தில் மட்டும் 7 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அம்மா அவர்களுடைய கடந்த 7 ஆண்டுகால ஆட்சியில் 3 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. வருங்காலத்தில் அவர் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் உரிய ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். சின்னதம்பி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

தனி மாவட்டம்

***7281—திரு. ஆர்.எம். சின்னதம்பி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியை மையமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியை மையமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்குவது குறித்து ஆய்வு செய்து, அரசு விதிகளின்படியும், அரசால் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும் புதிய மாவட்டம் உருவாக்க உரிய முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் பரிசீலிக்கப்படும் என்றும் மேலும், புதிய மாவட்டம் உருவாக்குவது என்பது அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டது என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.